DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 88 / 2020**

Deposition of Witness: PW1.

Name சுப்பிரமணியன் Father Name –ரங்கசாமி

Age 69 Village – காமராஜபுரம்

Taluk – போடிநாயக்கனுார்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2026.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. இந்த வழக்கு 4ம் லக்க சொத்து வண்டிப்பாதையின் உரிமையை பொறுத்தது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ள தோராய வரைபடத்தில் உள்ள விபரங்கள் சரிதானா என்றால் சரிதான். எனக்கு வண்டிப்பாதைக்கும் நடைபாதைக்கும் வித்யாசம் தெரியும் என்றால் சரிதான். நடைபாதை என்பதை ஆங்கிலத்தில் pathway என்று சொல்வார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 தோராய வரைபடத்தில் pathway என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 4ம் லக்க சொத்தின் தென்வடல் அகலம் 12 ¼ அடியென்று சொல்கிறேன் என்றால் சரிதான். 4ம் லக்க சொத்தானது சர்வே எண்.257/3 ல் தென்கடைசியிலும் சர்வே எண்.257/6B வடகடைசியிலும் உள்ளது என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 4ம் லக்க சொத்தின் தென்வடல் 12 ¼ அடி என்பது சர்வே எண்.257/3 ல் எத்தனை அடி உள்ளது, சர்வே எண்.257/6B ல் எவ்வளவு உள்ளது என்றால் மொத்தம் உள்ள 12 ¼ அடியும் சர்வே எண்.257/6B ல் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், எனது வழக்குரையிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் நான் சொல்லியுள்ள விபரங்களுக்கு முரணாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் வண்டிப்பாதை என்பது எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் நான் சுமார் 10 வருடங்களாக தான் வழக்குரை சொத்தை பராமரித்து வருகிறேன், 10 வருடங்களாக வண்டிப்பாதை உள்ளது அதற்குமுன்பாக 1ம் பிரதிவாதி வீராச்சாமி தான் என்னுடைய சொத்தை பராமரித்து வந்தார். கிழமேல் வண்டிப்பாதை மேற்கே எங்கே வந்து முடிவடைகிறது என்றால் மேற்கு எங்கள் வீட்டின் காம்பவுண்ட் சுவரில் வந்து முடிவடைகிறது. எனது தாயார்

எழுதிக்கொடுத்த தான பத்திரம் வா.சா.ஆ. 2 என்றால் சரிதான். சர்வே எண்.257/5 தான் வழக்குரை 3ம் லக்க சொத்து என்றால் சரிதான். சர்வே எண்.257/5 சொத்திற்கான வண்டிப்பாதை பொறுத்து தான் தாவா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 தான பத்திரத்தில் 3ம் லக்க சொத்திற்கு 4ம் லக்க சொத்தை வண்டிப்பாதையை காட்டியுள்ளார்களா என்றால் காட்டவில்லை. 1ம் பிரதிவாதி வகையறாக்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரமான வா.சா.ஆ.3ல் 2ம் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளது நான் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற குறிப்பில் 1வது சாட்சியாக கையொப்பம் செய்யதது்ம் நான் தான் என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதி வகையறாவும் ஏற்படுத்திக்கொண்ட பரிவர்த்தனை பத்திரம் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் வா.சா.ஆ.3 ஆவணத்தை குறிப்பிட்டு தான் எழுதியுள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி A–Schedule சொத்து 1ம் பிரதிவாதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த A–Schedule சொத்து தான் தாவா 1ம் லக்க சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து விபரத்திலும் தாவா 4ம் லக்க சொத்து வண்டிப்பாதையை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.4 பரிவர்த்தனை பத்திரம் என்பது தற்போதைய சர்வே எண்.257/6A எனக்கு ஒதுக்கி 1ம் பிரதிவாதி வகையறாவிற்கு ஒரு வீடும் பரிவர்த்தனை செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனையின் படி எனக்கு கிடைத்த சர்வே எண்.257/6A ல் வடக்கு பக்கம் கிணறும், கிணற்றடியில் உள்ள பாதையும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றடியில் உள்ள பாதை வழியாக தான் சர்வே எண்.257/6A ல் உள்ள எனது நிலத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பரிவர்த்தனை பத்திரத்தில் சர்வே எண்.257/6A நிலத்திற்கு கிழக்கு நான்குமாலாக தாவா 4ம் லக்க சொத்தான வண்டிப்பாதை காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. தாவா 4ம் லக்க சொத்தான வண்டிப்பாதையின் கிழமேல் அளவு என்ன என்றால் 120 அடியாகும். 3ம் லக்க சொத்தான சர்வே எண்.257/5க்கு தென்மேற்கு பக்கம் சர்வே எண்.257/7 உள்ளதா என்றால் சரிதான், சர்வே எண்.257/7 என்பது முத்துகிருஷ்ணம்மாள் நிலம் ஆகும். வா.சா.ஆ.9ல் உள்ள அ–பதிவேட்டில் சர்வே எண்.257/7 என்பது எனது தாயார் பெயரில் உள்ளது என்றால் சரிதான், அதை தற்போது மாற்றிவிட்டார்கள். சர்வே

எண்.257/8 மற்றும் சர்வே எண்.257/9 யார் பெயரில் உள்ளது என்றால் லிங்கையா பெயரில் உள்ளது. சர்வே எண்.257/7, 257/8 மற்றும் சர்வே எண்.257/9 நிலங்களுக்கு செல்லக்கூடிய வண்டிப்பாதை எங்குள்ளது என்றால் சர்வே எண்கள்.257/7, 257/8 மற்றும் 257/9 ஆகிய நிலங்களுக்கு வண்டிப்பாதை கிடையாது. மேற்படி நிலங்களுக்கு நடைபாதை உள்ளதா என்றால் நடைபாதையும் இல்லை. சர்வே எண்கள்257/7, 257/8 மற்றும் 257/9 ஆகிய நிலங்களில் உள்ளவர்கள் தற்போது விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.257/7 க்கு மேற்கு பக்கம் வீடுகளும், தெருக்களும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.257/7 என்பது எனக்கு பாத்தியப்பட்டு என் அனுபவத்தில் உள்ளது என்றால் என் அனுபவத்தில் தான் உள்ளது, ஆனால் முத்துகிருஷ்ணம்மாள் பெயரில் உள்ளது. தாவா சர்வே எண்.257/5 நிலத்திற்கு சர்வே எண.257/7 வழியாக சென்று அதன் மேற்கு பக்கம் உள்ள தெருவை அடைந்து அதன் வழியாக அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.257/5 3ம் லக்க சொத்திற்கு கிழக்கு பக்கம் யார் நிலம் உள்ளது என்றால் ராஜேஸ்வரி நிலம் உள்ளது. ராஜேஸ்வரி நிலத்திற்கான பாதை எங்கு உள்ளது என்றால் தேனி–போடி பிரதான சாலையில் உள்ளது. ராஜேஸ்வரி நிலம் வழியாகவும் நான் என்னுடைய தாவா 3ம் லக்க சொத்திற்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா 4ம் லக்க சொத்தான வண்டிப்பாதை என்பது எனது ஆவணங்களிலேயே குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், நாங்கள் ஒரே குடும்பமாக இருந்ததால் அதை பற்றி ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை. 4ம் லக்க சொத்து பாதை என்பது நான் கற்பனையாக மோசடியாக வழக்கிற்காக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் ஏற்றுக்கொண்டு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை வரைபடத்தில் சாம்பல் நிறத்தில் காட்டப்பட்டுள்ள பகுதி சர்வே எண்.257/3ல் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 புலவரைபடத்தில் நான் குறிப்பிட்டுள்ள வண்டிப்பாதை காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. நான் இந்த வழக்கில் கோரியுள்ள வசதி உரிமை என்பது எழாது என்றும் அதன் அடிப்படையில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில்

4ம்லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தடை செய்ததால் சர்வே எண்.257/2ல் உள்ள கிணற்றில் இருந்து அதில் உள்ள மின் மோட்டாரில் இருந்து தண்ணீர் எடுப்பதை நான் தடை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை பத்திரத்திலேயே சர்வே எண்.257/2ல் உள்ள கிணற்றிலும் மின் இணைப்பிலும் 1/8 பாகம் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கிணற்றில் பாகம் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் மின் இணைப்பில் பாகம் கொடுக்கப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் A Schedule சொத்தில் " மேற்படி கிணற்றில் 8ல் 1 பாகமும், மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள சர்வீஸ் எண்.138 உள்ள 5 HP மின்சார மோட்டார் வாரிவாய்க்கால் மண்மேடு வகையாறவில் 6ல் 1 பாகம் சேர்ந்து சர்வடக்கம்" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சட்டத்தை மதிக்காமல் 1ம் பிரதிவாதிக்கு அவரது சட்டப்படியான உரிமையை மறைக்கின்றேன் என்றும், 1ம் பிரதிவாதி சட்டத்தை மதித்து நடக்ககூடியவர் என்றால் சரியல்ல. தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்க தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 16.03.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.)

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.03.12 15:51:58 +0530

District Munsif,
Bodinayakanur.